## எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ் ஏன்?

உங்கள் குடும்பத்தின் இலக்குகளை அடைதல், உங்களுடைய வளரும் வாழ்க்கைமுறை தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் உங்கள் அன்புக்கினியவர்களை பாதுகாத்தல் இவையே எப்போதும் உங்களுடைய முன்னுரிமையாக இருக்கின்றன. இப்போது எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ் கொண்டு நாளைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி மகிழ்ச்சியை அனுபவியுங்கள். இது உங்களுக்கு பாதுகாப்பு, சேமிப்பு மற்றும் ஒரு பாதுகாப்பான நிதியத்தை உருவாக்கிட முறையான வருவாயை வழங்குகிறது. **எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ்** என்பது ஒரு தனிப்பட்ட, நான்-லிங்க்டு, பார்ட்டிசிபேட்டிங், லைஃப் இன்ஷ்யூரன்ஸ் சேமிப்புக்கள் திட்டம், முழு ஆயுள் காப்பீட்டின் விருப்பத்தேர்வு கொண்டது.


## முக்கிய சிறப்பம்சங்கள்

- உங்கள் குடும்பம், சொத்து உருவாக்கல் மற்றும் வருவாயின் முறையான புழக்கத்திற்கான **பாதுகாப்பு.**
- **முழு ஆயுள் காப்பீட்டைப்** பெற்று பயனடைய விருப்பத்தேர்வு, இது முதிர்வுநிலைக்கு பின் ஆயுள் காப்பீடு செய்துகொண்டவர் இறப்பு பேரில் கூடுதல் அடிப்படை காப்பீட்டுத் தொகையை அளிக்கிறது.
- **இரண்டு திட்ட விருப்பத்தேர்வுகள் :** உங்கள் தேவைகளுக்கு ஏற்ப திட்ட விருப்பத்தேர்வை தேர்வு செய்யவும்.
  - எண்டவ்மென்ட் ஆப்ஷன் : காப்பீடு மற்றும் சேமிப்பை வழங்குகிறது.
  - எண்டவ்மென்ட் வித் ஹோல் லைஃப் ஆப்ஷன் : எண்டவ்மென்ட் ஆப்ஷன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பலன்கள் தவிர உங்கள் ஆயுள் காப்பை வயது 100 ஆண்டுகள் வரை நீட்டிக்கச் செய்கிறது.
- சிங்கிள் அல்லது ரெகுலர் பிரீமியம் செலுத்துவதற்கான **தேர்வு.**
- **முறையான வருவாய் :** முறையான வருவாய் : முதிர்வுநிலைக்கு பின் 5/10/15/20 ஆண்டுகள் என காலப்போக்கில் முறையான இடைவெளிகளில் அடிப்படை காப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ள விருப்பத்தேர்வு.
- கட்டுபடியாகும் செலவில் **ரைடர்கள் மூலம் கூடுதல் பாதுகாப்பு.**

## மாதிரி விளக்கம்


| எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ் | | |
|---|---|---|
| ஆயுள் காப்பளிக்கப்பட்டவர் வயது : 35 ஆண்டுகள் | பிரீமியம் வகைகள் - ஆண்டு | பாலிசி காலவரை - 25 ஆண்டுகள் |
| அடிப்படை காப்பீட்டுத் தொகை : ₹20,00,000 | வருடாந்திரமாக்கப்பட்ட பிரீமியம்: ₹89,160 (பொருந்தும் வரிகள் நீங்கலாக) | ப்ளான் விருப்பத்தேர்வுகள் : எண்டவ்மென்ட் வித் ஹோல் லைஃப் |

**முதிர்வுநிலை பலன் :** ராம் வயது 100 ஆண்டுகள் வரை வாழ்ந்திருந்தால், அப்போது எண்டவ்மென்ட் காலவரையில் அதாவது 25 ஆண்டுகள் முடிவில், அவர் பெறுவது முதிர்வுநிலை பலனாக, பலன் 1, விளக்கத்தில் காட்டியுள்ளபடி மற்றும் வயது 100 எட்டிய நிலையில் பலன் 2 படி அவர் ஒரு கூடுதல் அடிப்படை காப்பீட்டுத் தொகையை முதிர்வு நிலை பலனாக பெறுவார்.




காட்சி 1

**இறப்பு பலன் :** அ) எண்டவ்மென்ட் காலவரையின்போது, ராம் வயது 55 ஆண்டுகளில் இறந்துவிட்டால், அப்போது நியமனதாரர்/பயனாளி இறப்பு பலன் காட்சி 2 படி, விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பெறுவார்.




காட்சி 2

**இறப்புப் பலன்** அதிகபட்சமானதாக இருக்கும் :


அ) இறப்பு பேரிலான காப்பீட்டுத் தொகை + அளிக்கப்பட்டுள்ள சிம்பிள் ரிவர்ஷனரி போனஸ், + முனைய போனஸ் ஏதேனும் இருப்பின். இதில் இறப்பு பேரிலான காப்பீட்டுத் தொகை அடிப்படை காப்பீட்டுத்தொகையின் அதிகபட்சம் அல்லது வருடாந்திரமாக்கப்பட்ட பிரீமியத்தின்$ 10 மடங்கு.

ஆ) இறப்பு தேதி வரை பெறப்பட்ட@ மொத்த பிரீமியங்களின் 105%.

*$வருடாந்திரமாக்கப்பட்ட பிரீமியம் என்பது பாலிசிதாரரால் தேர்வு செய்யப்பட்ட, பொருந்தும் வரிகள், ரைடர் பிரீமியங்கள், காப்புறுதி விண்ணப்பம் கணிப்பு கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மாடல் பிரீமியங்களுக்காக கட்டணங்கள், ஏதேனும் இருப்பின் நீங்கலாக, ஓர் ஆண்டில் செலுத்ததக்க பிரீமியம் தொகை.*

*@பெறப்பட்ட மொத்தம் பிரீமியங்கள் என்பது ஏதேனும் கூடுதல் பிரீமியம், ஏதேனும் ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் நீங்கலாக பெறப்பட்ட அனைத்து பிரீமியங்களின் மொத்தம் ஆகும்.*

ஆ) எண்டவ்மென்ட் காலவரைக்கு பிறகு, ராம் வயது 80 ஆண்டுகளில் இறந்துவிட்டால், அப்போது பலன் 1 படி ராம் பெற்றுக்கொண்ட முதிர்வுநிலை பலன் தவிர, அவருடைய நியமனதாரர்/பயனாளி இறப்பு பலன் காட்சி 3 படி, கீழே விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பெறுவார்.




^^முதிர்வுகால பலன் தொகை விளக்க நோக்கங்களுக்காக மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை உடையவருக்காக ஆகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள லாப விகிதங்கள் முறையே @4% மற்றும் @8% வீதம் என்று கருதப்படுகிறது. மேலும் இது மாதிரி விளக்கம் கொடுப்பகற்காக, இந்த கட்டணங்களின் அடிப்படையில், எல்லா கட்டணங்களையும் கணக்கில் கொண்டு காட்டப்பட்டுள்ளது. போனஸ் விகிதங்கள் போனஸ் குவிப்பு காலத்தில் நிலையாக கருதப்படுகிறது, நிறுவனத்தின் முதலீட்டு அனுபவத்தின் பேரில் உண்மையான போனஸ் மாறுபடலாம். இவை உத்தரவாதமானவை அல்ல மற்றும் இவை லாபத்தின் உச்ச அல்லது கீழ் வரம்பு அல்ல. எதிர்கால முதலீட்டு செயலாற்றல் உள்பட எண்ணற்ற காரணிகள் பொறுத்து லாபம் அமைகிறது. மேலும் தகவலுக்கு உங்களுடைய பாலிசியை குறிப்பிட்டு அதற்கான பலன் விளக்கத்திற்காக தயவுசெய்து கோரிக்கை செய்யவும்.

## எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ் ஒரு கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| **நுழைவு தகுதி வயது**** | **குறைந்தபட்சம்:** 18 வயது | **அதிகபட்சம்: எண்டௌமெண்ட் விருப்பத்தேர்வு**<br>ரெகுலர் பிரிமியம் (RP) : 55 ஆண்டுகள்<br>சிங்கிள் பிரிமியம் (SP) : 60 ஆண்டுகள்<br>**முழு ஆயுளுடன் எண்டௌமெண்ட் விருப்பத்தேர்வு** : 50 ஆண்டுகள்<br>(சிங்கிள்/ரெகுலர் பிரீமியம் இரண்டிற்குமாக) |
| **முதிர்வு நிலையில் அதிகபட்ச வயது**** | 65 ஆண்டுகள் | |
| **அடிப்படை காப்பீட்டுத் தொகை (₹ 1,000-ன் மடங்குகளில்)** | **குறைந்தபட்சம்:** ₹ 75,000 | **அதிகபட்சம்:** வரம்பு இல்லை, குழுவால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது |
| **பாலிசி காலவரை** | **குறைந்தபட்சம்: எண்டௌமெண்ட் விருப்பத்தேர்வு**<br>10 (RP) / 5 (SP) ஆண்டுகள்<br>**முழு ஆயுளுடன் எண்டௌமெண்ட் விருப்பத்தேர்வு**<br>15 ஆண்டுகள் (SP & RP இரண்டிற்குமாக) | **அதிகபட்சம்:** 30 ஆண்டுகள்<br>(எண்டவ்மென்ட் காலவரை) |
| **பிரீமியம் காலவரை** | சிங்கிள் பிரிமியம்/ஆண்டு/அரையாண்டு/காலாண்டு/மாதாந்திரம்# | |
| **பிரீமியம் செலுத்தும் காலவரை** | சிங்கிள் பிரிமியம்/ரெகுலர் பிரிமியம் (பாலிசி காலவரை போன்றதே) | |
| **பிரீமியம் வகைகளுக்கான ஏற்றம்** | அரையாண்டு : வருடாந்திர பிரீமியத்தின் 51.00%<br>காலாண்டு : வருடாந்திர பிரீமியத்தின் 26.00%<br>மாதாந்திரம் : வருடாந்திர பிரீமியத்தின் 8.50% | |
| **பிரீமியம்** | **குறைந்தபட்சம்:** | **அதிகபட்சம்:** |
| | சிங்கிள் பிரிமியம் : ₹43,000 | வரம்பு இல்லை,<br>குழுவால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது |
| | ஆண்டு : ₹6,000 | |
| | அரையாண்டு : ₹3,000 | |
| | காலாண்டு : ₹ 1,500 | |
| | மாதாந்திரம் : ₹ 500 | |

**வயது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் இப்போது முடிந்து போன பிறந்தநாளின் படியாகும்.
#மாதாந்திர வகைக்காக, 3 மாதங்கள் வரை பிரீமியம் முன்பணமாக செலுத்த வேண்டும். புதுப்பிப்பு பிரீமியம் பணச் செலுத்துதல் எலெக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (இசிஎஸ்) அல்லது நிலை கட்டளைகள் (வங்கிக் கணக்கிலிருந்து நேரடி டெபிட் மூலம் அல்லது கிரெடிட் கார்டு மூலம் செய்யப்படும் பணச் செலுத்தம்) மூலம் மட்டுமே செய்யப்பட வேண்டும். மாதாந்திர சம்பள சேமிப்பு திட்டத்திற்கு (எஸ்எஸ்எஸ்), 2 மாதங்கள் வரை பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்த வேண்டும் மற்றும் புதுப்பிப்பு பிரீமியம் சம்பளப் பிடித்தத்தின் மூலம் மட்டும் அனுமதிக்கப்படும்.

## ரிபேட்ஸ் அளிக்கத் தடை

**காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டபடி, எடுத்துரைப்பது :**

a) இந்தியாவில் உயிர் அல்லது சொத்து சம்பந்தமான ஒரு புதிய காப்பீடு அல்லது காப்பீட்டைப் புதுப்பித்தல் அல்லது தொடரச் செய்வதை ஊக்குவிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒருவருக்குக் கொடுக்கப்படும் கமிஷனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியை பாலிசி மீது கட்டப்படும் பிரீமியத்தில் ஒரு தள்ளுபடியாக அளிக்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் மற்றும் வெளியிடப்பட்டுள்ள பாலிசி அம்சங்கள் அல்லது காப்பீட்டாளரின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் தள்ளுபடிகள் தவிர பாலிசி எடுக்க, புதுப்பிக்க அல்லது தொடர ஊக்குவிக்கும் முறையில் எந்த தள்ளுபடியும் வழங்க அல்லது ஏற்றுக்கொள்ள அனுமதி இல்லை.

b) இந்த பிரிவின் விதிகளின் கீழ் நிறைவேற்றுவதில் எவரும் தவறு செய்திருப்பின் அபராதத்திற்கு உரியவர் ஆவார், அது பத்து லட்சம் ரூபாய் வரை இருக்கப்பெறலாம்.

**Toll-free No.:** 1800 267 9090 | SMS '**LIBERATE**' to 56161 | **Email:** info@sbilife.co.in | **Web:** www.sbilife.co.in
(Between 9.00 am & 9.00 pm)

எஸ்பிஐ லைஃப் - சுப நிவேஷ் என்பது ஒரு தனிப்பட்ட, நான்-லிங்க்டு, பார்ட்டிசிபேட்டிங், லைஃப் இன்ஷ்யூரன்ஸ் சேமிப்புக்கள் திட்டம்.

**போலியான தொலைபேசி அழைப்புகள் மற்றும் போலியான/மோசடியான சலுகைகள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.**
காப்பீடு பாலிசிகள், போனஸ் அறிவிப்பு அல்லது பிரீமியங்கள் முதலீடு போன்ற நடவடிக்கைகளில் IRDAI ஈடுபடுவதில்லை. இது போன்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறும் பொதுமக்கள் காவல்துறையிடம் புகார் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இடர் காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை கவனமாகப் படிக்கவும். ரைடர்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், விலக்கல்கள் குறித்த கூடுதல் விபரங்களுக்கு, ரைடர் சிற்றேட்டை தயவுசெய்து பார்க்கவும். இங்கே காட்டப்பட்டிருக்கும் வர்த்தகச் சின்னம் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவிற்குச் சொந்தமானது, எஸ்பிஐ லைஃப் உரிமம் பெற்று அதைப் பயன்படுத்துகிறது. எஸ்பிஐ லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : 'நடராஜ்', எம். வி. ரோடு, வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே ஜங்ஷன், அந்தேரி (கிழக்கு), மும்பை-400 069. **IRDAI பதிவு எண் 111** | CIN : L99999MH2000PLC129113.
35/ver2/07/22/SP/TAM